முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 29.10.2025. EP.No.11/2024, ம.சா.1. வெள்ளியங்கிரி, த/பெ. நஞ்சப்பகவுண்டர்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என்ன பரிகாரம் கோரி இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வண்டித்தடம் வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளேன். வண்டித்தடம் எந்த வருட பத்திரத்தில் கண்டுள்ளது என்றால் 1987 ம் ஆண்டு பத்திரத்தில் உள்ளது. மேற்படி பத்திரம் யார் யார் எழுதிக்கொடுத்தது என்றால் இந்த எதிர்மனுவாதிகளும் அவரது தகப்பனாரும் எழுதிக்கொடுத்தது ஆகும். வடிவேல் கவுண்டருக்கு மற்றொரு மகன் சின்னப்பன் (எ) பழனிச்சாமி உள்ளார் என்றால் சரிதான். அவர் திருமணம் செய்து கொண்டு 20 வருடத்திற்கு முன்பே வெளியில் சென்றுவிட்டார் அவர் இந்த கிரயப்பத்திரத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான்.

2) சின்னப்பன் (எ) பழனிச்சாமி உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். அவர் கையெழுத்து செய்யாததால் கிரயப்பத்திரம் அவரை சட்டப்படி கட்டுப்படுத்தாது என்றால் எனக்கு தெரியாது. வண்டித்தடம் பொது வண்டித்தடம் என்றால் சரிதான். கிழமேல் ரோட்டிலிருந்து குருசாமி பூமி வழியாக குருசாமிக்கு இந்த 3 எதிர்மனுவாதிகள் மற்றும் சின்னப்பன் (எ) பழனிச்சாமி பூமிக்கு மேற்படி தடம் வருகிறது என்றால் சரிதான். மேற்படி தடம் நேரே தெற்கே சென்று கிழக்கு முகமாக திரும்பி செல்கிறது என்றால் சரிதான். அந்த தடம் தான் எனது பூமிக்கு செல்லும் தடம் என்றால் சரிதான். குருசாமி பூமி வழியாக குருசாமிக்கும், எனக்கும் இந்த 3 எதிர்மனுவாதிகள் மற்றும் சின்னப்பன் (எ) பழனிச்சாமி பூமிக்கும் பொதுவாக செல்கிறது என்றால் சரிதான். மேற்படி டிரான்ஸ்பார்மர் பொதுவாக செல்கிறது என்றால் சரிதான்

3) தென்வடல் தடம் ஒட்டி மேற்புறம் சிவகாமியம்மாள் பூமி உள்ளது

ஒப்பம்/– (R.சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

என்றால் சரிதான். சிவகாமியம்மாள் பூமி வண்டித்தடத்திலிருந்து 5 – 6 அடி உயரத்தில் இருக்கிறது என்றால் சரிதான். தென்வடலாக சென்று கிழக்குமுகமாக செல்லும் இடத்தில்கிழக்கு நோக்கிச் செல்லும் பி ஏ பி வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். மேற்படி தடம் எந்த இடத்திலும் வளைவு இல்லாமல் நேராக செல்கிறது என்றால் சரிதான். மேற்படி வண்டித்தடத்தில் என்ன மரங்கள் உள்ளன என்றால் புதர் மண்டிக்கிடக்கிறது. கிழக்கே போகும் தடத்தில் என்ன உள்ளது என்றால் அங்கும் புதர் மண்டிக்கிடக்கிறது அதன் தென்மரத்தில் தேக்குமரம், சீனி புளியமரம் சாய்ந்து உள்ளது.

4) தேக்குமரம் வண்டித்தடத்தின் கிழக்கே உள்ளது என்றால் சரியல்ல. அது தெற்கே தான் உள்ளது. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண். 236/2024 என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இதே வண்டித்தடத்தை பொறுத்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படிவழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் போது நான் உடனிருந்தேனா என்றால் ஞாபகமில்லை. அவர் என்ன அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நீதிமன்ற ஆணையர் மேற்படி வண்டித்தடத்தில் மரங்களும் , புதர் மண்டிக்கிடப்பதால் அதை சுத்தம் செய்து கொடுத்தால் தான் வண்டித்தடத்தை பார்வையிட்டு அளக்க முடியும் என்று குறிப்பாணை தாக்ல செய்துள்ளார் என்றால் சரிதான்.

5) தேக்குமரம், சீனிபுளியமரத்திற்கு 40 வயது இருக்கும் என்றால் தேக்கு மரத்திற்கு 40 வயது இருக்கும், சீனி புளியமரத்திற்கு அவ்வளவு இருக்காது.

ஒப்பம்/– (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

வண்டித்தடத்தில் உள்ள புதரை சுத்தம் செய்தால் தான் தேக்குமரம், சீனிபுளியமரம் வண்டித்தடத்தில் எங்கு உள்ளது தெரியும் என்றால் சரிதான். பொது வண்டித்தடம் 40 ஆண்டுகளாக புதர் மண்டிக்கிடக்கிறது என்றால் அது தான் தடம் அதை தவிர்த்து வேறு தடம்கிடையாது கடந்த 1 1/2 ஆண்டுகளாக தான் மேற்படி புதர் வண்டித்தடத்தில் உள்ளது. 1 1/2 ஆண்டுகளுக்கு நான் புதரை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் காவல் நிலையத்தில் கூறியதற்கு சிவில் பிரச்சனை என்பதால் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கு எழுத்து மூலமான உத்தரவு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) இந்த 3 எதிர்மனுவாதிகளுக்கும், சின்னப்பன் (எ) பழனிச்சாமிக்கும் இந்த மனு தடம் தான் தடம் என்றால் சரிதான். இந்த மனு வண்டித்தடம் இந்த 3 எதிர்மனுவாதிகளும், சின்னப்பன் (எ) பழனிச்சாமியும் ஓட்டி வரும் பூமிக்கு மேற்கோட்டில் அமைந்துள்ளது என்றால் சரிதான், அந்த தடம் தான் கிழக்கு நோக்கி திரும்பி செல்கிறது என்றால் சரிதான். அந்த தடத்தை யார் அழித்தாலும் யாருமே மேற்படி தடத்தை உபயோகிக்க முடியாது என்றால் சரிதான்.

ஒப்பம்/- (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.